**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 236/2022**
**Prosecution Witness - PW7**

| | | |
|---|---|---|
| Name | : | Mr.A.Perumal |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.08.2026.
(All accused absent. Petition U/s.355 BNSS is filed and allowed).
முதல் விசாரணை–

நான் வெள்ளி சந்தை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது வெள்ளி சந்தை காவல் நிலைய குற்ற எண் 111/2020 147, 294 பி, 506–2, இதச மற்றும் பிரிவு 4 TNPHW Act மற்றும் பிரிவு 3(1) TNPPDL Act வழக்கினை 20.07.2020 அன்று எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டேன். இதற்கு முன்பு கடந்த 18.04.2020 அன்று 19.30 மணிக்கு வெள்ளி சந்தை காவல் நிலைய தலைமை காவல் 589 திரு.ராமஜெயம் என்வபர் நிலைய அலுவலில் இருந்தபோது முட்டம் பஞ்சாயத்து தலைவர் திருமதி.குயின் மேரி என்பவர் கொடுத்த புகாரினை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப வெள்ளி சந்தை காவல் நிலைய குற்ற எண் 111/2020 147, 294 பி, 506–2, இதச மற்றும் பிரிவு 4 TNPHW Act மற்றும் பிரிவு 3(1) TNPPDL Act ஆக பதிவு செய்து அசல் புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் இரணியல் அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும்ஒரு நகலை ஆய்வாளர் தங்கராஜ் என்பவரின் பார்வைக்கு விசாரணைக்காக வைத்தார். ஆய்வாளர் தங்கராஜ் அவர்கள் முதல்

விசாரணை நகலை பெற்று 19.4.20 அன்று காலை சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெபா மெர்லின், ஜாஸ்மின் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். குயின் மேரி, மேரி, ஜெரால்டு ராபர்ட், ஜெபா மெர்லின் மற்றும் ஜாஸ்மின் அவர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். சம்பவ இடத்திலிருந்து சுமார் 53 சென்டிமீட்டர் நீளமுள்ள இரும்பு பைப்பையும் சாட்சிகள் 6, 7 ஆகியவர்கள் முன்னிலையில் அத்தாட்சியை படிவம் 91 மூலமாக கைப்பற்றினார். 20.4.2020 அன்று 16 மணியளவில் முட்டம் கலங்கரை விளக்கம் அருகில் வைத்து வழக்கின் ஏழாம் எதிரி சசி என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார். பின்பு 20.7.2020 அன்று அவர் பணி மாறுதல் சென்ற காரணத்தினால் அந்த விளக்கின் மேல்விசாரணையை நான் எடுத்துக் கொண்டேன்.

அதன் பிறகு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்து ஏற்கனவே செய்யப்பட்ட விசாரணை உறுதிப்படுத்தப்பட்ட படியால் மீண்டும் வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. திரும்பவும் எதிரிகளை தேடி வந்த நிலையில் 1 முதல் 6 வரையான எதிரிகள் நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்றார்கள். பின்னர் சாட்சிகள் தேவ அருள்ராஜ், தலைமை காவலர் ராமஜெயம், புகார்தாரர் குயின் மேரி அவர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் சம்பவம் நடந்தது உண்மை என்று தெரிய வந்ததால் எதிரிகள் மீது இறுதி அறிக்கை அதே பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்தேன். எனக்கு முன்பு விசாரணை செய்த நபர் கைப்பற்றிய இரும்பு கம்பி விசாரணையின்போது கைப்பற்றியது தான் அது சா.பொ.1. நான் விசாரணை

செய்த முதல் தகவல் அறிக்கை என்னிடம் காண்பிக்க படுவதுதான் அது அ.சா.ஆ.1 எனக்கு முன்பு விசாரணை செய்த நபர் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் என்னிடம் காட்ட படுவது தான் அது அ.சா.ஆ.2 மற்றும் 3 ஆகும். என்னிடம் காண்பிக்க படும் சேத சான்றிதழ் நான் பெற்றது தான் அது அ.சா.ஆ.4 ஆகும். இந்த வழக்கினுடைய புகார் என்னிடம் காண்பிக்க படுவது தான் அது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்ய படுகிறது.

குறுக்கு விசாரணை

நான் சொன்னது போல் புகாா் பெற்று வழக்கு பதிவு செய்ய படவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரியாக விசாரிக்காமல் தவறான இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. சான்று பொருட்கள் எல்லாம் வழக்கிறகாக தயார் செய்ய பட்டவை என்றால் இல்லை. வழக்கு ஆவணங்கள் எல்லாம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்ய பட்டது என்றால் இல்லை. எதிரிகளை சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால், இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**